24th September 1958]

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes, Sir.

(b) The Madras State Electricity Board has agreed to give, subject to the usual staggering, etc., restrictions, H.T. supply to the works up to a maximum demand of 32,000 K.W. after the commencement of operation of the Periyar Power Station and also after the construction of the 110 K.V. line from Periyar to Arumuganeri.

SRI M. S. SELVARAJAN : உத்தேச மின்இணைப்பு திட்டத்தின் செலவு என்ன ? என்னென்ன நிபந்தனைகளுக்குட்பட்டு இது அனுமதிக்கப் பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMAIAH : இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

SRI S. NAGARAJA MONIGAR : " தாரங்கதரா " என்பது என்ன என்று விளங்கவில்லை.

THE HON. SRI V. RAMAIAH : அது கம்பெனியின் பெயர்.

Velanganni-Vedaranyam Road

* 475 Q.—SRI A. VEDARATHNAM : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வேளாங்கண்ணி-வேதாரண்யம் ரஸ்தா கப்பி போடும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது ?

(ஆ) இந்த ரஸ்தாவில் உள்ள கள்ளிமேடு கிராமத்தில் அடைப் பாற்றுக்குப் பாலம் கட்டும் வேலை துவக்கியாகிவிட்டதா ? இல்லையானால், எப்போது ஆரம்பமாகும் ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) The detailed estimate for the work has been sanctioned and the work will be taken up for execution during the current year.

(b) No, Sir. The detailed estimate for the work has been finalised. As soon as it is sanctioned by the competent authority, steps will be taken to execute the work expeditiously.

SRI A. VEDARATHNAM : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத் தில் இந்த ரஸ்தாவுக்கு " டாப் பிரையாரிட்டி " கொடுக்கப்பட்டிருந்தும், இப்பொழுது இரண்டு ஆண்டுகள் ஆகியும் ஒரு வேலையும் நடக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? இப்படியே காலத்தைக் கடத்தி இந்தத் திட்டத்தை கைவிட்டுவிடவேண்டுமென்ற உத்தேசம் அரசாங்கத்துக்கு உண்டா ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் 1957–58-ல் இந்த வேலையை " கிராண்ட்ஸ் வொர்க்ஸ் "-ன் கீழ் எடுக்கும்படியாகத் திட்டம் இருக்கிறது. முதலில் போட்ட எஸ்டிமேட்படி 11·6 லட்சம் செலவாகும். ஆனால் ஒதுக்கி யிருக்கும் தொகை ரூ. 3·1 லட்சம். ஆனால், இப்பொழுது திரும்பவும் ரிவைஸ் செய்து ரூ. 5·3 லட்சம் ஆக கணக்கிட்டிருக்கின்றது. இதை என்ன முறையில் செய்யலாம் என்பதைப்பற்றி தலைமை எஞ்சினியர் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.